# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்

## அசல் வழக்கு எண். 9/2015

2023 -ம் ஆண்டு ஜுன் 27 ஆம் நாள் செவ்வாய் கிழமை இன்று இந்த சாட்சியின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.S.வடிவேல், B.Sc., B.L., மாவட்ட உரிமையியல் நீதிபதி, பல்லடம்(FAC), அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| சாட்சி | : DW1 |
| பெயர் | : வரதராஜன் |
| தந்தை / கணவர் பெயர் | : சுப்பிரமணியக்கவுண்டர் |
| வயது | : |
| சமயம் | : இந்து |
| தொழில் | : |
| கிராமம் | : |
| வட்டம் | : பல்லடம் |

## குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நானும் என்னுடைய சகோதரர்களும் 1994 ல் பாகப்பிரிவினை செய்துகொண்டோம் என்றால் சரிதான். அதில் எனக்கு B பாகச் சொத்து ஒதுக்கினார்கள் என்றால் சரிதான். எனக்கு வந்த சொத்து பொது இடம் தவிர மொத்தம் 5.78 1/2 ஏக்கர் என்றால் ஆவணத்தை பார்த்தால் தான் சரியாகத் தெரியும். பொது இடம் 59 செண்ட்என்றால் ஆவணத்தை பார்த்தால்தான் தெரியும். 1994 ற்கு முன்பாக நானும் என் அப்பாவும் 1978 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். 1978 லிருந்து எனக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் நான் சுவாதீனத்திலிருந்து விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்கண்ட சொத்தில் வந்த வருமானத்தைக் கொண்டும் என் அப்பா எனக்கு கொடுத்த பணத்தை கொண்டும் சாமளாபுரத்தில் 5 செண்ட்டும் மற்றும் ஒரு 15 செண்ட்வும் வாங்கினேன் என்றால் சரிதான்.

2. மேற்கண்ட 15 செண்ட் இடத்தில் குடோன் கட்டி தறி வைத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி குடோனுக்கும், தறிக்கும் வங்கியில் கடன் வாங்கினேன் என்றால் இல்லை. மேற்கண்ட சமயத்தில் நான் வாதிகள் என் மனைவியுடன் குழந்தைகளுடன்

இருந்தேன் என்றால் சரிதான். எனது 1978 பாகச் சொத்தை வாதிகள் இடையூறு செய்வதாக இந்த நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.186/2014 வழக்கை நான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

3. மேற்கண்ட அசல் வழக்கு என் மனைவி என்னுடன் அடிக்கடி பிரச்சனை செய்து வந்து 1991 ல் என் குழந்தைகளை கூட்டிக் கொண்டு சென்று விட்டதாகவும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . மேற்படி அசல் வழக்கில் 1991 ல் இருந்து எனக்கும் அவர்களுக்கும் தொடர்பில்லை என்று கூறியுள்ளேன் என்றால் மனைவிக்கும் எனக்கும் தொடர்பில்லை . ஆனால் குழந்தைகளுக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. அவர்கள் 2 வருடம் என்னுடன் தான் இருந்தார்கள்.

4. மேற்கண்ட அசல் வழக்கில் குழந்தைகள் என்னுடன் இருந்ததாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 1991 க்கு பிறகு என் மனைவி என்னுடன் வரவில்லை என்றால் சரிதான். நான் 1995 ல் என் மனைவியை விவாகரத்து செய்ய வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். விவாகரத்து வழக்கில் என் மனைவி ஆஜர் ஆகாததால் ஒருதலை பட்சமாக எனக்கு தீர்ப்பாகியுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு 2006 ல் நான் இரண்டாவது திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். இரண்டாவது திருமணத்திற்கு பிறகு எனக்கு விவசாயமும் , விறகு வியாபாரமும் வருமானம் என்றால் விவசாயம் மட்டும் தான் வருமானம் ஆகும். விறகு வியாபாரம் தற்பொழுது 5, 6 வருடமாக என் மனைவி பெயரில் செய்கிறேன். என் தாத்தா எனக்கு 1978 ல் உயில் மூலமாக 1.23 ஏக்கர் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பம் S.வடிவேல் B.Sc.,B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC),

பல்லடம்.